பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 19 திங்கட்கிழமை 03 08 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 249

## விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களினால்

# கடந்த ஒரு மாதத்தில் மட்டும்

# 220க்கு அதிக படையினர் பலி!

## 179 நவீனரக துப்பாக்கிகள் உட்பட ஏராளமான ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 3

தமிழீழப் பகுதிகளில் கடந்த மாதம் விடுதலைப் புலிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் ஸ்ரீலங்காப் படையினர் தரப்பில் 220 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல்களின்போது 179 நவீன ரகத் துப்பாக்கிகள், இரு மோட்டார்கள், ஆர். பி. ஜி. உட்பட ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஸ்ரீலங்காப் படையினரின் இரு முகாம்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு அவை அழித்து நிர்மூலமாக்கப்பட்டன.

பீப்பாய்க் குண்டுகளை வீசி அனர்த்தங்களை விளைவித்து வந்த வை - 8 ரக சீனச் சகடை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 15க்கு மேற்பட்ட இராணுவ வாகனங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டன.

கடந்த மாதம் விடுதலைப் புலிகள் படையினருக்கு ஏற்படுத்திய இப் பாரிய இழப்புகளினால், தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகளை நடத்த திட்டமிட்டிருந்த ஸ்ரீலங்கா அரசுக்கு பெருவாரா நெருக்கடி ஏற்பட்டது.

இதனால் ஸ்ரீலங்கா அரசு தமிழீழத்தில் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கைகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

இது ஸ்ரீலங்கா அரசு இது வரை சந்தித்திராத பாரிய பின்னடைவாகும் — என்று அவதானிகள் தெரிவித்தனர். [ஒ-3]

## 20 தமிழக மீனவர்களை ஸ்ரீலங்காப் படை கடத்தியது!

சென்னை, ஆக. 3

நேற்று முன்தினம் தனுஷ்கோடிக்கும் கச்சதீவுக்கும் இடையே கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் சுமார் 20பேரை ஸ்ரீலங்கா கடற்படையினர் ஆயுதமுனையில் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து இயந்திரப் படகுகளில் தொழிலில்ஈடுபட்டிருந்த மீனவர்களே, படகுகளுடன் சேர்த்து கடத்திச் செல்லப்பட்டனர்.

கடத்தப்பட்ட மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி இராமேஸ்வரம் இயந்திரப் படகு மீனவர் சங்கம் பிரதமர் நரசிம்மராவையும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவையும் தந்தி மூலம் கோரியிருக்கிறது. [உ-த-7]

## கட்டுவன் படையினர் சூடு: ஏழாலையில் பெண் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 3

ஏழாலை வடக்குப் பகுதியில் விறகு பொறுக்கச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் கட்டுவன் முகாம் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

சூடுபட்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சமயமே அவர் மரணமானார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஏழாலை வடக்கைச் சேர்ந்த தங்கராசா செல்வராஜேஸ்வரி [வயது 50] என்பவரே மரணமானார். (உ-15)

## தந்திரிமலை பிக்கு கொலை: சதிப் பின்னணியில் பலர்!

### இளம் பிக்கு விளக்க மறியலில்

கொழும்பு, ஆக. 3

தந்திரிமலை விகாராதிபதி வண. விமலஞான தேரர் கொலை பலர் சேர்ந்து உருவாக்கிய சதியின் விளைவாவாகும். இவ்வாறு விசாரணைகளின் முடிவில் பொலீஸார் நம்புவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த கொலைச் சம்பவம் குறித்து இரகசியப் பொலீஸார் பலரை விசாரணைக்கு உட்படுத்தியிருக்கின்றனர்.

இதே சமயம் தேரரின் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவந்த இரகசியப் பொலீஸார் அதே விகாரையைச் சேர்ந்த இளம் பிக்கு ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தரணாவே பஞ்சாகித்தி தேரோ என்ற இந்த இளம் பிக்கு, கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிவானிடம் இவர் ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூர்க் கந்தன் உற்சவம்: இன்று காலை கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஆக 3

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் இன்று திங்கள் முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பூசைகள் காலை 7 மணிக்கு ஆரம்பித்துப் பின்னர் சரியாக முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

உற்சவ காலத்தையொட்டி ஆலயச் சூழல் தூய்மைப்படுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டிருக்கிறது. அண்மையில் செய்யப்பட்ட வர்ணப் பூச்சு வேலைகளால் ஆலய கோபுரங்களும் மண்டபங்களும் அழகு மிளிரக் காட்சி தருகின்றன.

ஆலயச் சூழலில் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரின் அலுவலகம் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ காவல் துறையினரின் உற்சவகாலப் பணி [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலியில் படகுகள் மோதி விபத்து

யாழ்ப்பாணம், ஆக. 3

கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இரு படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

அவற்றில் ஒரு படகு பெரும் சேதமடைந்தது. எனினும் அதில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் தெய்வாதீனமாக ஆபத்து ஏதுமின்றிக் காப்பாற்றப்பட்டனர்.

விபத்துக்குள்ளான படகில் பயணம் செய்த இளம் பெண் ஒருவர் அதிர்ச்சிக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-126]

### கடந்த 3 மாதங்களில் மட்டும்

## 874 சிறுவர், சிறுமியரை தெற்கில் காணவில்லை!

கொழும்பு, ஆக. 3

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 874 சிறுவர், சிறுமியர் காணாமற் போய்விட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பி. பி. ஸி. அறிவித்தது.

இவர்களில் 30 க்கும் குறைவானவர்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது

பாணந்துறையிலும் மாணவிகள் சிலர் கடத்தப்பட்டனர் என்றும், அவர்களில் தப்பி வந்த ஒரு மாணவி, கறுப்புச் சட்டை அணிந்த 'அண்ணன்மார்' சிலர் தன்னைக் கூட்டிச் சென்றதாக கூறினார் என்றும் பி. பி. ஸி. செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது (ஒ-10)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 3

மட்டக்களப்பு இருதயபுரத்தில் கடந்த 29 ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் வீரவேங்கை செல்வராஜ் (சிவராசா பாலச்சந்திரன்- இருதயபுரம்) என்ற போராளி வீரமரணமடைந்தார். [ஒ-3]

## வவுனியா தவசிகுளத்தில் பொம்மர்கள் குண்டு வீச்சு!

வவுனியா மாவட்டத்தில் நொச்சிக்குளம், தவசிகுள பகுதிகளில் நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

அதே சமயம் ஹெலி ஒன்றும் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதல்களின் போது தவசிகுளம் பகுதியில் ஒரு வீடு முற்றாக சேதம் அடைந்தது. [ஒ-3]

## சுயவிருப்புடன் ஈழ அகதிகள் திரும்புவதை உறுதி செய்வதற்கு வழிமுறையில்லை!

கொழும்பு, ஆக. 3

ஈழத் தமிழ் அகதிகளைத் தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பும் இரண்டாவது கட்டம் இன்று ஆரம்பமாகிறது. ''இந்தியன் எயர்லைன்ஸ்'' விமான மூலம் முதலாவது தொகுதி அகதிகள் இன்று [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மேற்பார்வையிலேயே இம்முறை அகதிகள் இங்கு வந்து சேரவுள்ளனர்.

இவ்வருட முற்பகுதியில் இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையே ஓர் உடன்பாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உலகத்தில் உயிர்க்கொல்லி பட்டினி உண்டாகக் காரணம் வரட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவேகய II நடவடிக்கையின் போது:

# கைதான இளம் பெண் வவுனியா நீதிமன்றில் ஆஜர்

வவுனியா, ஆக. 3

கடந்த மாதம் இடம்பெற்ற பலவேகய - II இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளம் தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த செவ்வாய் அன்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கொழும்புச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

முல்லைத்தீவைச் சேர்ந்த லூயிசியஸ் மனோகரி (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

மேல் விசாரணைக்காக அவரை காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

வன்னியான் பாதையினால் பிரதான நிலப்பகுதியிலிருந்து குடாநாட்டுக்குள் பிரவேசிக்க முற்பட்ட போதே இப் பெண் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவருடன் வந்த மேலும் சில ஆண்கள் ஹெலிகொப்டர் தாக்குதலுக்கு அஞ்சி மறைவிடம் ஒன்றில் பதுங்கிய போது இராணுவத்னர் அவர்களையும் கைது செய்தனர் என்றும் —

பின்னர் அவர்கள் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டுகிறது.

ஆனால் கைதானோரில் மேற்படி பெண் மாத்திரமே அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் வவுனியா கொண்டு வரப்பட்டார் என்றும் —

ஏனையோர் குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

# 'குமண' இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஆக. 3

'குமண' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு இன்று காலை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பல் நேற்று வந்து சேரும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது எனினும் கப்பல் கொழும்பிலிருந்து புறப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தால் அது இன்றே பருத்தித்துறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மா, 600 மெற்றிக் தொன் அரிசி, 435 மெற்றிக் தொன் சீனி, மற்றும் பருப்பு, ரவை, சவர்க்காரம், மின் மீன் ஆகியனவும் 250 தபால் பொதிகளும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

41 பரல் மண்எண்ணையும் கப்பலில் வருகிறது.

இதைவிட, தனியாருக்குப் பெருந்தொகையான பொருள்கள் எடுத்து வருவதாகத் தெரியவந்தது.

# ஜனாதிபதி பிரேமதாச ஏன் வெளிநாடு செல்கிறார்?

## அவர் நாட்டில் இருக்கக் கூடாதாம்

கொழும்பு, ஆக. 3

அடுத்த மாதம் வரும் வியாழ மாற்றம் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நற்பலனைத் தராதாம்.

இதனால் அவர் குறிப்பிட்ட காலத்துக்கு நாட்டில் இருக்கக் கூடாது என்று சோதிடர்கள் கூறியிருப்பதாகவும், இதன் காரணமாகவே பிரேமா வெளிநாடு செல்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், சிறிமா பண்டாரநாயக்காவுக்கு வியாழ மாற்றம் நல்ல பலனைத் தரும் என்று சோதிடர்கள் கூறியுள்ளனராம். [ஒ-3]

# திருட்டுப் பொருள்களுடன் இராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பு, ஆக. 3

ஸ்ரீலங்கா இராணுவத்தில் இருந்து விலகிச் சென்றவர் எனக் கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவர் திருட்டு பொருள்களுடன் தலவத்து ஓயாவில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

தலவத்து ஓயா பகுதியில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டிலும், மற்றும் கூட்டுறவுக்கடை, பாடசாலைகள் ஆகியவற்றிலும் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுக்கும் இந்த சிப்பாய்க்கும் தொடர்புண்டா என்பது குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருடப்பட்ட பொருள்கள் சிலவற்றை மாத்தறை கடைத்தெருவில் விற்க முற்பட்ட போதே மேற்படி நபர் கைதானார்.

திருடிய பொருள்களை வைத்திருக்க உதவினார் என்ற சந்தேகத்தில் கோனரெல்ல பகுதியில் வசிக்கும் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


★ இசை மாலை ★

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

இசை மாலை நிகழ்ச்சி

இடம்: மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.
நாளை 04 — 08 — 1992

அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி. 05 — 08 — 1992

காலம்: இரவு 8-30 மணி

நுழைவுச் சீட்டுக்கள்:
ரூபா 100-/ இருவருக்குரியது
ரூபா 50/-. 25/- தனி ஒருவருக்குரியது
ரூபா 10/- பாடசாலை மாணவர்களுக்குரியது.

ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

"செஞ்சோலை"
நிர்வாகத்தினர்.

[சி-3007]


# உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 3

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் கோவில், மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில், எழுதுமட்டுவாள் விழுபளை அருள்மிகு கண்ணகை என வழங்கும் ஸ்ரீமீனாட்சி அம்பாள் கோவில் ஆகியவற்றின் வருடாந்த உற்சவங்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலின் ஆவணி மகோற்சவமும் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் நடைபெறும்.

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி கோவிலின் ஆடிச் செவ்வாய் உற்சவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். [த]

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஆக. 3

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மற்றும் 13 வயது உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் இரண்டு ஆட்டங்கள் தினமும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

ஒன்பது கழக அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறும். [உ-3]

# இன்று பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம். ஆக. 3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிர்வாகத்தை இடைக்காலசபை இன்று பெறுப்பேற்கும் எனத் தெரியவருகிறது. [உ-3]

# கௌரவிப்பு

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தின் இவ்வருடாந்திய மஹோற்சவ தினங்களில் சங்கீத கதாப் பிரசங்கம் செய்த திரு. எம். எஸ். ஸ்ரீதயாளனுக்குச் "சொல்லின் செல்வர்" என்ற பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.

ஆலயப் பரிபாலன சபையினரும், இந்து இளைஞர் சங்கத்தினரும் நடத்திய பாராட்டு விழாவில் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. எஸ். சிவலிங்கம் திரு. ஸ்ரீதயாளனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. கே. கணேசலிங்கம் மக்கள் சார்பில் பொற்கிழி வழங்கினார். [அ]

# எயர்லங்கா விமான சேவை பெரும் பாதிப்பு

கொழும்பு, ஆக. 3

எயர் லங்கா விமானம் மலேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் எயர் லங்காவின் சர்வதேச சேவைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விமானம் தற்போதைக்கு விடுவிக்கப்படும் சாத்தியமில்லை என்றும் கூறப்படுகிறது.

விமானத்தை விடுவிக்கும் முயற்சிகளில் சட்டத்தரணிகள் நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளது. அதே சமயம் எயர் லங்கா அதிகாரிகளும், மலேஷிய அதிகாரிகளும் இது தொடர்பாக பேச்சுவார்த் [illegible] வர். (ஒ-10)

# அதிகாலை 4 மணி முதல் நல்லூரில் வீதித்தடை

யாழ்ப்பாணம், ஆக. 3

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் அதிகாலை 4 மணிமுதல் இரவு 10 மணி வரை வீதித்தடை அமுல்படுத்தப்படும் இதற்கு தமிழீழ காவல்துறையினரே முழுப்பொறுப்பாக இருப்பர்.

அவர்களுக்கு உதவியாக மாநகரசபை ஊழியர்கள், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர், யாழ். மாவட்ட சாரணர்கள், சென். ஜோன் அம்புலன்ஸ் படையினர், கொக்குவில் மக்கள் நலன் காக்கும் பிரிவினர், சைவத் தொண்டர்கள் ஆகியோர் பணிபுரிவர்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் உற்சவ காலத்தை ஒட்டிய பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதார மற்றும் தொண்டர் சேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது;

ஆலயச் சுற்றாடலில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள், தவற விடப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டவை யாவும் தமிழீழ காவல்துறையினரே கையாள்வார்கள்.

ஆலயச் சுற்றாடலில் அசைவ உணவு விற்பனையும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சுற்றாடலின் புனிதத் தன்மைக்கு ஒழுக்கக் கேடுகள் புரிவோர் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர். வழிபாட்டுக்கு வரும் அடியார்களுக்கு இடைஞ்சல் செய்வோர், பொழுதுபோக்குக்காகப் பல தடவைகள் நடந்து இடம் மாறுவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய விசேட உற்சவங்களின் போது தமிழீழ காவல் துறையினர் சிவில் உடையில் (வேட்டியுடன்) உள் வீதியிலும் கடமை புரிவர். [அ-30]

## தந்திரிமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளித்துள்ளதாகவும் தெரியவருகிறது;

கொலைக்கு பாவிக்கப்பட்ட கிரனேட்டை பொலீஸ் ஜீப் ஒன்றுக்குள் இருந்து திருடி பத்திரப்படுத்தி வைத்திருந்ததாகவும், கொலைக்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கொலையை செய்ததாகவும் இவர் கூறியிருப்பதாக தெரியவந்துள்ளது. [ஒ-எ]

# இன்று

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மருதனார் மடம் கல்விக் கோட்டப் பிரிவினர் உரும்பராய் கொத்தணியில் மாணவர் கல்வி மேம்பாட்டுக் கழகம் ஒன்றை இன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

ஊரெழு சீ. சீ. த. க. பாடசாலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் இக்கழகத்தில் ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வகுப்பு வரையான மாணவர்கள் பங்கு கொண்டு பயன் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# வவுனியாவில் கைத்தொழில் பேட்டை

வவுனியாவில் கைத்தொழில் பேட்டை ஒன்று நிறுவப்பட உள்ளது.

நாட்டில் கைத்தொழில் சபை நிறுவவுள்ள பதினொராவது கைத்தொழில் பேட்டை இதுவாகும்.

# ஒலிம்பிக் போட்டி முடிவு

லண்டன், ஆக. 3

ஒலிம்பிக் பந்தயங்களில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி, முன்னணி வகிக்கும் நாடுகள் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 25 | 16 | 18 |
| அமெரிக்கா | 17 | 19 | 17 |
| ஜேர்மனி | 14 | 10 | 14 |
| சீனா | 09 | 14 | 06 |
| ஹங்கேரி | 09 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 06 |
| தென் கொரியா | 06 | 01 | — |
| ஸ்பெயின் | 06 | — | — |
| கனடா | 05 | 01 | 05 |
| ருமேனியா | 04 | 05 | 06 |
| பிரான்ஸ் | 04 | 04 | 11 |
| இத்தாலி | 04 | 04 | 07 |
| பிரிட்டன் | 04 | 03 | 03 |
| ஜப்பான் | 03 | 05 | 05 |
| போலந்து | 03 | 04 | 04 |
| கியூபா | 02 | 02 | 05 |
| செக்கொஸ்லேவேகியா | 02 | 02 | 01 |
| துருக்கி | 02 | 01 | — |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| நோர்வே | 01 | 02 | — |
| பிரேஸில் | 01 | 01 | — |
| எஸ்தோனியா | 01 | — | — |
| கிரேக்கம் | 01 | — | — |
| சுவீடன் | — | 03 | 03 |
| நெதர்லாந்து | — | 02 | 06 |
| டென்மார்க் | — | 02 | — |
| ஸ்லொவேனியா | — | 02 | — |
| சுயேச்சை (யூகோஸ்.) | — | 01 | 02 |
| பெல்ஜியம் | — | 01 | 02 |
| லத்வியா | — | 01 | 01 |
| இஸ்ரேல் | — | 01 | 01 |
| பெரு | — | 01 | — |
| ஜெமெய்கா | — | 01 | — |
| நமீபியா | — | 01 | — |
| ஆஸ்திரியா | — | 01 | — |
| பின்லாந்து | — | — | 01 |
| மங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |
| வடகொரியா | — | — | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

இலங்கைத் தமிழ்

# அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசாங்கம் முடிவு!

கொழும்பு, ஆக. 3

சுவிஸர்லாந்தில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும் —

முதற்கட்டமாக 250 பேரை கொழும்புக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

முதற்கட்டமாக சுமார் 250 தமிழ் அகதிகளைக் கொழும்புக்கு அனுப்பி அவர்கள் தத்தமது பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்படும் வரை சுமார் ஒரு மாத காலத்துக்கு இந்த அகதிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளது.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக சுவிஸில் உள்ள அகதிகளுக்கான தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர் —

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை —

வதிவிட அந்தஸ்து வழங்கப்படாத நிலையில் சுவிஸ் நாட்டில் தங்கியுள்ள சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கை அகதிகளை கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்ப அந்த நாட்டு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் —

இந்த யோசனை குறித்து மேலும் ஒரு சில ஐரோப்பிய நாடுகள் ஆராய்ந்து வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. [த - எ]

## மட்டக்களப்பில் இரண்டு பிரதேச செயலகங்கள்

மட்டக்களப்பு, ஆக. 3

மட்டக்களப்பில் இரண்டு பிரதேச செயலகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு நகர பிரதேச செயலகத்தை அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவும், காத்தான்குடி பிரதேச செயலகத்தை அமைச்சர் திரு ஏ. ஆர். மன்சூரும் திறந்து வைக்கவிருக்கின்றனர்.

மண்முனை வடக்கு நகர பிரதேச செயலக அரசாங்க அதிபராக திரு. ஏ. கே. பத்மநாதனும், காத்தான்குடி பிரதேச செயலக அரசாங்க அதிபராக தி. பத்தினியம்மாவும் நியமிக்கப்பட உள்ளனர் என்று தெரியவந்தது. [த-3]

## மட்டக்களப்பிலும் பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, ஆக. 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 பரீட்சை நிலையங்களில் ஜி சி ஈ. உயர்தர பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பமானது. இப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் விமானம் மூலம் மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [த-எ]

## எயர் லங்கா நிறுவனம் வழக்குத் தொடரும்

கொழும்பு, ஆக. 3

நஷ்ட ஈட்டுப் பிரச்சினை தொடர்பாக எயர் லங்கா விமானம் ஒன்றினைக் கோலாலம்பூர் விமான நிலையத்தில் நிறுத்தி வைத்த மலேசிய உல்லாசப் பயண ஏஜண்ட் மீது வழக்குத் தொடர எயர் லங்கா நிறுவனம் முடிவு செய்துள்ளது. [த-எ]

## பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியது

கொழும்பு, ஆக. 3

தென் இலங்கையில் உள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு அரசியல் கைதிகளை வாரத்தில் இருமுறை அவர்களின் உறவினர்கள் சென்று சந்திப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

## ஐ.நா. அதிகாரிகள் குழு இன்று மீண்டும் மன்னார் விஜயம்

கொழும்பு, ஆக. 3

ஐ நா. அகதிகள் நலன் காக்கும் நாடுகளின் அதிகாரிகள் குழு ஒன்று மீண்டும் இன்று திங்கள் மன்னாருக்கு விஜயம் செய்ய உள்ளது.

ஐ. நா. அகதிகள் தாதரக அதிகாரிகள் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இக்குழு முதல் தடவையாக கடந்த மாதம் நடுப்பகுதியில் மன்னார் சென்றது. மன்னார் அகதிகளின் நிலைவரத்தை அப்போது இக் குழு கண்டறிந்து திரும்பியது. மீண்டும் இக்குழு மன்னார் செல்வதால் மன்னார் அகதிகளுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-எ)

### எதிர்க்கட்சி முன்னணிச் செயலாளராக லலித்:

## சுதந்திரக்கட்சி மத்திய குழு 7ஆம் திகதி கூடி ஆராயும்

கொழும்பு, ஆக 3

ஜனாதிபதித் தேர்தலையொட்டிய எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணிச் செயலாளராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த திரு அத்துலத் முதலியை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக இம் மாதம் 7ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அத்துலத்முதலியை செயலாளராக்கும் முயற்சியை எதிர்த்துச் செயற்பட சுதந்திரக்கட்சியில் உள்ள காமினி-லலித் எதிர்ப்புக் குழுவினர் முன்வந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இக் குழுவிற்கு அனுரா பண்டாரநாயக்கா மற்றும் தர்மசிரி சேனநாயக்கா தலைமை வகிக்கின்றனர்.

இதனால் கூட்டு எதிர்க்கட்சி முன்னணிக்குள் பெரும் நெருக்கடி எழுந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் மாத நடுப்பகுதியில் பலாலி செல்வர்

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் இம்மாத நடுப்பகுதியில் அங்கு செல்லவிருக்கின்றனர்.

மாதாமாதம் சென்று அவர்களின் நலன்களைக் கவனித்து வரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் உறவினர்களின் கடிதங்களை எடுத்துச் செல்வர். [த-3]


**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்துக்கு பெண் எழுதுவினைஞர் தேவை. க.பொ.த. சாதாரணத்தில் சித்தியடைந்தவரும், ஆங்கிலம் எழுத, வாசிக்க அனுபவம் உள்ளவரும் 18 – 27 வயதுக்கு உட்பட்டவர்கள் 15-08-1992 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

**விக்னா கல்வி நிறுவனம்,**
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (சி-2976)



தீவக பாக்கியம் குழந்தைகள்

**★ சிகிச்சை நிலையம் ★**

கே. கே. எஸ். வீதியில் மனோகரா சந்தியில் இருந்து 100 யார் தொலைவில் காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரையும், கல்வியன்காட்டில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தியில் பிற்பகல் 2-30 தொடக்கம் மாலை 6-30 மணி வரையும் சேவையாற்றும்.

[22020]


## 1ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

| அவனியில்: | | அவனடியில்: |
|---|---|---|
| 16 |  | 14 |
| — | | — |
| 12 | | 08 |
| — | | — |
| 1943 | | 1991 |

அமரர்

**வைத்திலிங்கம் நாகேந்திரம்**

[யாழ் / மாநகரசபை, சுகாதார பரிசோதகர்]

அப்பா அன்பாய் இருந்தீர்கள்
எங்களை பண்பாய் வளர்த்தீர்கள்
கடவுளைத் துணையாய் பிடித்தீர்கள்
கடமையில் துணிவாய் நின்றீர்கள்
இல்லத்தில் தூணாய் நின்றீர்கள்
இதயத்தில் இன்பமாய் இனித்தீர்கள்
எல்லோரையும் சமமாய் மதித்தீர்கள்
தேடரிய செல்வமாய் வந்தீர்கள்
தொடராமல் இடையிலே சென்று விட்டீர்கள்
எங்கு தான் சென்றாலும் ஓராண்டல்ல
ஓர்யுகமே ஆனாலும் உங்கள் பரிவும், பிரிவும்
என்றென்றும் மாறாதப்பா! ஆறாதப்பா!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

17, குறோசெற் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். [22021]


**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


**AL 93/94**
கணக்கியல்
புதிய அலகுகள் ஆரம்பம்
சனி, ஞாயிறு
2-3 முடிவுக் க/குகள்
3-4 மாற்றுண்டியல் க/கு
S. K. பிரபாகரன்
[சி/2985]



**N. C. A.**
ஆத்தியடி.
பருத்தித்துறை.

**A/L 93, 94 A/L**
பொருளியல்
பாட அலகுகள்:
ஸ்ரீரங்கநாதன்
வினா-விடை:
க. கலாகரன்
கணக்கியல்
எஸ். கே. பிரபாகரன்
[சி-2987]


## நினைவஞ்சலி

| மண்ணகம்: | | விண்ணகம்: |
|---|---|---|
| 19 |  | 03 |
| — | | — |
| 06 | | 07 |
| — | | — |
| 1975 | | 1992 |

செல்வி

**தர்சினி சிறீவாணி புஸ்பநாதன்**

பந்தமுடன் பாசமெலாம் பாகா யோடப்
பார்தனிலே பாங்குறவே வாழ்ந்த கோதாய்!
சந்ததமும் உனதுஎழில் வதனம் ஈந்த
சாந்தநிலை எமதுமனச் சிறையி லாட
அந்தரத்தில் எமையுலகில் உழல விட்டு
ஆண்டவனின் அருளொழுகு திருத்தா ளேற்ற
செந்தமிழே! சிறீவாணி உன் இழப்பு
சீர்படைத்த தர்சினியே! ஆறாதம்மா!!

இன்று காலை 6-15 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் இவரின் ஆத்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:

பெற்றோர், தங்கை,
உற்றார், உறவினர், தோழிகள்.

22/4, பிளைச்சர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [22018]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**N. D. T. படிவம்**

கட்டுப்பெத்தை பொறியியல் கல்லூரி N. D. T. விண்ணப்பப் படிவமும், வர்த்தமானியும், எழுதுநர் சேவை விண்ணப்பப் படிவமும், வர்த்தமானியும் பார்வைக்கு உண்டு. பாரதி பதிப்பகம் (A. B. Printers) 430, காங்கேசன்துறை வீதி. (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சிவதொண்டன் நிலையம் ஆகியவற்றுக்கு அருகில்) யாழ்ப்பாணம். [இ-2980]

**விண்ணப் ப்படிவம்**

தடடெழுத்தாளர், எழுதுவினைஞர் பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் N. D T. விண்ணப்பப் படிவமும் விற்பனைக்குண்டு வர்த்தமானி அறிவித்தல் பிரதியும் பார்வைக்குண்டு. பிக்பென்ஸ் புத்தகசாலை, கிளிநொச்சி. [சி-3009]

**தேவை**

எமது தர்க்கா பத்தி வெற்றுப் பைக்கெற்றுக்கள் வைத்திருப்பவர்கள் எமது கடைகளிலும், விற்பனைப் பிரதிநிதிகளிடமும் கொடுத்து அதற்கு ஏற்ற வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் "அண்ணா தொழிலகம்", இணுவில். [சி/2964]

**தாதி தேவை**

தாதி பயிலுனர் தேவை. விண்ணப்பிக்கவும்: Dr. P. சொர்ணலிங்கம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [22010]

**மணமகன் தேவை**

இந்து மதத்தைச் சேர்ந்த A/L படித்த, 12 இல் செவ்வாயும், லக்கினத்தில் சந்திரன், சுக்கிரன், கேதுவுமுடைய, நட்சத்திரம்: பரணி 32 வயது பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பு: வி. ம. நவரத்தினம், (மதவடி) மானிப்பாய் றோட், உடுவில். (4929)

**சோதிடம்**

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை; ஆனந்தா சோதிட நிலையம், 249 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம் - தினமும் பி. ப. 2 முதல் 6 வரை. [22007]

**வகுப்புகள்**

City and Guilds of London Institute Part II Quantity Surveying - 1993 வகுப்புகள் 05 - 08 - 1992 புதன்கிழமை காலை 6-30 — 8-30 ஆரம்பமாகின்றன. Measurement திங்கள் - புதன் Estimating and Analysis of Prices செவ்வாய்-வியாழன். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. (21989)

## 3 இலங்கையர் கைது!

சென்னை, எழும்பூரில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக மூன்று இலங்கையர் உட்பட நான்கு பேர் கைதாகியுள்ளனர். இவர்களிடமிருந்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்கள் மீட்கப்பட்டன.

---

உடுவில் கிழக்கு

திருவருள் மிகு கற்பக விநாயகர்

ஆலய மஹோற்சவ கால

# சிறப்புச் சொற்பொழிவு

நிகழ்த்துபவர்:
சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம் B. A. Dip-in-Edu.
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)

விடயம்:
**திருவாசக, திருமந்திர பேருரைகள்**

காலம்: **03 - 08 - 1992 — 14 - 08 - 1992**


நேரம்: பிற்பகல் 7-00 — 8-00 மணி

- கற்பக விநாயக ஆலய பரிபாலன சபை.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
30-07-1992 [21985]

---

## ஐந்தாம் மாத அஞ்சலியும் பிறந்த தின நினைவலைகளும்



அமரர்

## சு. இராஜலிங்கம் (ராசா)

(ராஜன் வர்த்தக நிலையம்)

அன்னையின் மடியில்: **03—08—1959**
ஆண்டவன் திருவடியில்: **07—03—1992**

பிறந்த நாளும் இன்று தான் - நீ
பிணைந்த நாளும் மூன்று தான்
இறந்த ஏழும் தொடர்பு தான் - இதை
எண்ணிப் பார்த்தால் கதையுமாம்!

நிம்மியென்று அழைத்திடும்
நினைவு வந்து அலைக்குதே!
நிம்மதியும் போனதே - உம்
நினைவலைகள் வீசுதே!

ஐந்து திங்கள் அணைந்ததே
அதிலும் நினைவு துளிர்க்குதே!
சிந்தும் கண்ணீர் நிலைத்ததே
சிலையாய் எம்மைச் சிதைத்ததே!

தந்த துளிர்கள் தவிக்குதே
தம்மை நொந்து சலிக்குதே!
வந்து வந்து போவதால் - நினைவு
வருத்தும் துன்பமானதே!

மிதுனும் வினோத்தும் வந்துடன் - தினம்
என்னைச் சுற்றித் தேடுவார்
எதுவும் கேட்கும் அருணுடன்
சரணுமும்மை நாடுவார்

விதியின் செயலை விந்தையாய்
விரும்புமவரும் அறிவாரோ?
கதியை நினைந்து அழுவதைக்
கண்ணே ராசா கருதுவேன்.

மனைவி, பிள்ளைகள்.

32, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர். (21964)

---

## வணிக முதல் தேர்வு
## மீட்டல் வினா-விடை வகுப்பு

(1992இன் பரீட்சைக்குரியது யாழ். பல்கலைக்கழகம்)

விரிவுரையாளர் குழு

பொருளியல்: — திரு. அருளானந்தம் - B. A. (Hons.)
முகாமைத்துவம்; — திரு. துரைரட்ணம் B. Com. (Hons)
கணக்கியல்: — திரு. ஸ்ரீ B. Com. (Hons.)
அளவையியல்: — திரு. சோதி B. B. A.

ஆரம்பம்: **08-08-1992** சனி 2மணிக்கு

இடம்:
**கலை, வர்த்தகக் கல்லூரி**
வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம். [இ-2952]

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லப்பா சின்னத்தம்பி

(மின்சார இயந்திர இயக்குனர்)

தோற்றம்: **1934**
மறைவு: **1988**

திதி: **03—08—1992**

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், எல்லோருக்கும் ஆதரவாய், பாசத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்த எம் அன்புக் கணவரே! தங்கள் சிரித்த முகமும், இனிய பேச்சும் எமது இதயத்தை விட்டு ஒரு போதும் அகலாது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பெறாமக்கள்,
மருமக்கள், சகோதரி,
சகோதரர்கள், மைத்துனர்.

கடகப்புல லேன்,
சுன்னாகம். (சி-2492)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: **04 — 09 — 1932**



மறைவு: **28 — 07 — 1990**

## அமரர் துரைச்சாமி நடராசா

திதி: 03 — 08 — 1992

வாழ்விற்கு வழிகாட்டி
வாழ வைத்த எம் தெய்வமே!
வேதனையில் எமை தவிக்கவிட்டு
விரைந்தீர்கள் விண்ணுலகம்!
பாசவலையினை பக்குவமாக நெய்தீர்கள்!
பரந்தாமன் பாதநிழலை பறந்தோடிசென்றீர்கள்!
எத்தனை ஜென்மம் நீங்கள் எடுத்தாலும்,
அத்தனையிலும் நீளும் எம் நினைவலைகள்.

உங்கள் பிரிவால் தினமும் வாடும்:
அன்பு மனைவி, மகன்.

66/9, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (22012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நிர்ப்பந்திக்க முடியாதா?

பிரெஞ்சு மருத்துவத் தொண்டர் நிறுவனத்தில் சாரதியாகப் பணிபுரிந்த, மன்னாரைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை அமிர்தகுமார் என்பவருக்கு நாற்பதாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

மனிதாபிமானமற்ற சித்திரவதை, சட்ட விரோதக் கைது-தடுத்து வைப்பு ஆகியவற்றின் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகக் கூறி அமிர்தகுமார் தொடர்ந்த வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

காரணம் கூறாமல் தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்து, தடுப்புக் காவல் என்ற பெயரில் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யாது காட்டுமிராண்டித்தனமாகச் சித்திரவதை செய்து அரச படைகளும், பொலிஸாரும் அடிப்படை உரிமைகளை மீறுவது ஒன்றும் புதியதல்ல.

கடந்த கால்நூற்றாண்டு காலமாகச் சர்வசாதாரணமாக நடந்து வருவது. பூஸா தடுப்பு முகாம் தமிழ் இளைஞர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட சித்திரவதை முகாம். அது தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாக விளங்குவது. அங்கு லட்சக் கணக்கான தமிழ் இளைஞர்கள் இந்த அநியாயங்களை அனுபவித்தார்கள்.

தமிழ் இளைஞர் கைதும், தடுப்புக்காவலும், சித்திரவதையும், அடிப்படை உரிமை மீறலும் இடைவெளி இல்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஈழம் போர்-2 இன் பின்னர் அமிர்தகுமாரைப் போல ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படையினரின் இரக்கமற்ற அரக்கத்தனம் மிகுந்த சித்திரவதைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கூறப்பட்ட வழக்கின் மனுதாரருக்குக் காயங்கள் உண்டாக்கியதற்காக நீதிமன்றம் நட்டஈடு வழங்க உத்தரவிட்டிருக்கிறது. தடுப்புக் காவல் சித்திரவதையால் காயங்கள் மட்டுமன்றி உளவளம் பாதிக்கப்பட்டு எதிர்கால வாழ்க்கையை இழக்கும் ஆபத்துக்குள்ளான தமிழ் இளைஞர்கள் எத்தனை பேர்!

தமிழர்களின் வாழும் அடிப்படை மனித உரிமையையே சிதறடித்து, குண்டு வீச்சு நடத்தி அவர்களைக் கொல்லும் அரசும் அதன் படைகளும் தடுப்புக் காவலில் உள்ளோரைச் சித்திரவதை செய்வது ஒன்றும் வியப்பல்ல.

எனினும் அடிப்படை மனித உரிமை மீறல் குறித்து அக்கறையுள்ள சர்வதேச அமைப்புகள் தடுப்புக் காவலிலுள்ள ஒவ்வொரு தமிழ் இளைஞனினதும் அனுபவங்களைத் திரட்டி அகில உலகத்துக்கும் அறிவித்து ஸ்ரீலங்கா அரசின் மனிதாபிமானமில்லாத தன்மையை அம்பலப்படுத்த வேண்டும்.

இயலுமானால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதாகக் கூறித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட, வைக்கப்படும் ஒவ்வொரு தமிழரின் நிலை குறித்தும் நீதி விசாரணை நடத்தி நஷ்டஈடு கொடுக்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்த முடியாதா?

ஸ்ரீலங்கா அரசு அதற்கு மறுத்தால் சகல உலக நாடுகளுக்கும் அதனை ஆதாரபூர்வமாக எடுத்துச் சொல்லி நிதி உதவி மற்றும் உதவிகள் வழங்குவதை நிறுத்துமாறு மனித உரிமை இயக்கங்களினால் அழுத்தம் கொடுக்க முடியாதா?

# நம்பும் அடியவர் துன்பம் துடைத்திடும் நல்லையம்பதியுறை நல்லருள் முருகன்

கந்தன், கடம்பன், கார்த்திகேயன், சரவணன், சற்குரு எல்லாம் காரணப் பெயர்கள். ஒன்றாக இணைந்தவன். கடம்ப மாலையை அணிந்தவன், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்; சரவணப் பொய்கையில் வளர்ந்தவன்; தந்தைக்கு உபதேசித்தவன் என்று இவை பொருள்படும். குழகன், குமரன், குகன் என்ற பெயர்களும் அவனுக்குண்டு. அழகன், இளைஞன், உள்ளக் குகையில் குடியிருப்பவன் என்று இவை பொருள்படும்.

முருகனுடைய சிறப்புக்கள் அழகு, இளமை, அறிவு, ஆற்றல், அருள் என்பனவாகும். அழியா அழகுரு அவனுடையது. மாறா இளமை அவனுடையது. ஔவைக்கும், அப்பனுக்கும் அவன் புகட்டிய அறிவு அகலமானது, ஆழமானது. பிரமாவையும், சூரனையும் அடிப்படுத்திய ஆற்றல் அளவிடற்கரியது. வந்தனை செய்வார்க்கன்றி நிந்தனை செய்வோர்க்கும் அருளுகின்ற தன்மை அவனுடையது. இவையெல்லாம் அவனை அனைவரும் விரும்புகின்ற கடவுளாக ஆக்கிவிட்டன.

**காந்தக் கடவுள்**

எனவே கந்தக் கடவுளை காந்தக் கடவுள் என்றால் மிகையில்லை. அவன் தமிழர்களின் கடவுள்; கண்கண்ட

### நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

தெய்வம்; கலியுக வரதன். அழகும் இளமையும், ஆற்றலும் அறிவும் அருளும் அவனிடம் இணைந்து இருப்பதால் அவன் அனைவரையும் வசீகரிக்கும் ஆற்றலுடையவனாக விளங்குகின்றான். இதனால் தான் முருகனடியார்கள் எண்ணிலடங்கார்.

அவனுக்கு அணி சேர்ப்பன வேலும், மயிலும், சேவலும் தேவியர் இருவரும் எனலாம். கூர் வேலும், தோகை மயிலும், அணி சேவலும், வள்ளி தெய்வானை இருபுறமும் இருக்கும் எழிற் காட்சி-கண் கொள்ளாக் காட்சியாகும். எனவே தான் அவ்வெழிற் காட்சியைக் கண்டின் புற இரண்டு கண் போதாதென்று கவல்கின்றார் முருக பக்தரான அருணகிரியார்.

மக்கள் குமரனிடம் கூடிய பற்றுக் கொள்வதற்கு இன்னுமொரு காரணம். அவன் குறை தீர்க்கும் கடவுள் என்பதினாலாகும். அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவன், எண்ணும் போது வண்ண மயில் மீது, கண் நிறையக் காட்சி தந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பவன். முருகா! என வோர் தரமோதும் அடியார் முடிமீது தனது இணைதாள் புனைபவன். நம்பும் அடியவர் துன்பம் துடைத்திடும் நல்லையம்பதி உறை எங்கள் அருள் முருகன் என்பும் உருக நினைப்பவர் உள்ளத்து என்றும் இருக்கும் கருணையுரு அவன்: எனவே தான் கந்தக் கடவுள் எங்கள் சொந்தக் கடவுளாவார்.

நல்லையம்பதி முருகனுக்கு இன்று வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகின்றது. இதனை எமது பிரதேசத்தின் பெருவிழா எனவும், யாழ்ப்பாண சைவ மக்களின் சமூக விழா எனவும், அமைதிவிழா எனவும் பக்திப் பரவச விழா எனவும் கூறலாம். பகைவனுக்கு அருளும் பான்மையை உணர்த்தும் முருக வழிபாடு, அருகதையற்ற மக்கள் என்ற நிலையை மாற்றி பெருமையுடன் உரிமை பெற்று வாழ வழி வகுத்திடு நல்லைக் குமரா என்று நெஞ்சுருகி அவனை நிதம் பணிவோம்.

— வாசுகி சிவராமலிங்கம் —

★

அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தனை அனுதினமும்
அல்லும் பகலும் நினைந்து நினைந்து அகமுருகி
செல்வா! குமரா செவ்வேள்முருகா என இறைஞ்ச
பொல்லா வினைகள் போயகன்று பொடிபடுமே!

# தமிழர் ஜீவனுள்ள சமூகமாக திகழ கலை மீதான ஈடுபாடே காரணம்!

## அரங்கேற்ற நிகழ்ச்சியில் பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், ஆக. 3

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் தமிழினம் ஜீவனுள்ள ஒரு சமூகமாக இங்கே உலவுகிறது என்றால் கலைத்துறை மீது நமது இனம் காட்டிவரும் ஈடுபாடே முக்கிய காரணமாகும். கலை நிகழ்ச்சிகள் ஜீவனுடையவை. நெருக்கடியான சூழலிலும் பொதுமக்கள் அருமையான கலை நிகழ்ச்சிகளை கண்டு களிக்கக் கூடியதான படைப்புகளை கலைஞர்கள் அளித்து வருகின்றமை பெருமைப்படத்தக்கது.

கடந்த சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற செல்வன் திருக்குமரனின் மிருதங்க அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

இராமநாதனின் இசை மகேந்திரன் வழியாக பாய்ந்து மிருதங்க ஓசையாக திருக்குமரன் ஊடாக எம்மை மகிழ்வித்தது. இராமநாதன் நுண்கலைக்கழகம் யாழ்ப்பாண இசை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகிறது - என்றார்.

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பேசும் போது:

தென் பகுதியில் அரசும் மக்களும் கலைஞர்களைப் பெரிதும் கௌரவிக்கின்றனர். கலைஞர்களுக்கு அரசு உதவிகளையும் அளித்து வருகின்றது. ஆனால் இங்குள்ள கலைஞர்கள் தமது ஆற்றலையும் திறமைகளையும் வெளிப்படுத்த வாய்ப்பின்றி உள்ளனர். எனவே பொது மக்களும் கலை வளர்க்கும் பணியில் உள்ள ஸ்தாபனங்களும் கலைஞர்களுக்கு உதவுவதன் மூலம் எமது கலை, கலாசாரம் மங்காது காப்பாற்ற முன்வர வேண்டும் - என்றார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. அ. வைத்திலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

(த-111)

### பாதுகாப்பு வழங்க ஏற்பாடாம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்கள் ஊடாகப் பயணஞ் செய்யும் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் பிரதேசங்கள் ஊடாகப் பயணஞ் செய்யும் தமிழர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படையினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை, தாக்குதல் எதுவும் நடைபெற வாய்ப்பான இடங்களில் இராணுவத்தினர் பகல் வேளைகளில் காவலில் ஈடுபட்டு வருகின்றனர்.

[த-எ]

# பூவரசம் இலையில் கறி; செவ்வரத்தம் பூவில் பானம்

## சத்துணவுக் கண்காட்சியில் விளக்கம்

உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பிரபல்யப்படுத்தும் விதத்திலும், பிரதேசத்தின் மூலவளங்களைத் தக்கபடி பயன்படுத்தத் தூண்டும் விதத்திலும் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் சுகாதார அறிவைப் புகட்டும் வகையிலும் அமைந்த பிரஸ்தாப கண்காட்சியை மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரும், பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்தினரும் இணைந்து நடத்தினர்.

சுகாதாரத்தைப் பேணுதல், சத்துணவு தயாரித்தல், கோழி வளர்த்தல், தாய்-சேய் நலன் பேணுதல், விவசாய உற்பத்திப் பெருக்கம், மரம் நாட்டுதலைத் தூண்டுதல், வாழ்க்கைத் திறன்களை வளர்த்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு கண்காட்சி அமைந்திருந்தது.

போரூட் நிறுவனம், மூளாய் சிறுவர் பாடசாலை, சமுத்திரா உற்பத்தி நிலையம், சுகாதாரப் பகுதியினர், மில்க் வைற் நிறுவனத்தினர், விக்ரோறியாக் கல்லூரி மனையியல் பிரிவினர் ஆகியோர் தத்தமது காட்சியகங்களில் முன்சொன்ன விடயங்கள் குறித்து பூரண விளக்கமளித்தனர்.

சந்தைக்கு வராத கொவ்வை இலை, பூவரசம் இலை, நந்தியாவட்டை இலை என்பவற்றைக் கொண்டு சத்தான கறிவகைகளைச் சமைப்பது குறித்து மனையியல் காட்சியகத்தில் விளக்கப்பட்டது. செவ்வரத்தைப் பூவிலிருந்து பானம், நாவல் கொட்டையிலிருந்து கோப்பி போன்ற பானம் என்பனவும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன.

(த-௫)

## புலிகளுடன் தொடர்பு என்று

# இந்தியா கதை பரப்புவதாக பாகிஸ்தான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 3

பாகிஸ்தான் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இராணுவத் தொடர்பு இருப்பதாக, இல்லாத கதைகளை இந்தியா பரப்பி வருவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

"இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. எமக்கு புலிகளுடன் எவ்விதத் தொடர்பும் இடையாது"— இவ்வாறு ஐ நாவில் உள்ள பாகிஸ்தான் தூதுக்குழுவின் பேச்சாளரான மன்சூர் சுஹாயில் என்பவர் கூறினார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பளித்து, பயிற்சி அளித்து ஆயுதங்களும் வழங்கியவர்கள் இந்தியர்களே: அவர்கள் உருவாக்கிய பூதம் அவர்களையே பிடிக்க வந்துள்ளது"— என்றும் ஜனாப் பேசுகையில் தெரிவித்தார்.

[த-எ]

# உட்கட்சித் தேர்தல்களை நடத்தும்படி அனுரா சவால்

கொழும்பு, ஆக. 3

அனுராவும் சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் தாக்குவதில் ஈடுபட்டிருப்பதாகவும்— உட்கட்சித் தேர்தலை உடனடியாக நடத்தும்படி கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுரா சவால் விட்டிருப்பதாகவும் கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்த சூழ்ச்சிக் கதைகளை நிராகரித்த அனுரா, சதிகள் இருந்தால் அவற்றை தீர்க்க உட்கட்சி தேர்தலை நடத்தும்படியும் கேட்டிருக்கிறார்.

'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் — கட்சிக்குள் சிலர் கட்சியை ஒழிக்க முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டிய அவர் —

தேர்தல் நடத்தினால் சூழ்ச்சிக்காரர்கள் அம்பலமாவார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

[த-எ]

### தமிழர் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

மட்டக்களப்பு மாவட்டம் மூதூர் அரச மருத்துவ மனையில் வைத்திய வசதிகளைப் பெறுவதில் அங்குள்ள தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

முஸ்லிம்களின் அச்சுறுத்தல் காரணமாக மருத்துவமனை அமைந்த பகுதிக்குச் செல்ல தமிழர்கள் அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது.

[த-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு செல்லத்துரை

### வேலணை

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான கார்த்திகேசு செல்லத்துரை காலமானார்.

இவர் பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்கந்தராஜா [விடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்], அனுஷலெட்சுமி, ஸ்ரீதரன் [பிரான்ஸ்], ஸ்ரீபாஸ்கரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி செல்வரூபி ஸ்கந்தராஜா [கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்], கந்தையா [கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், கிளிநொச்சி], குமுதினி [பிரான்ஸ்], சிவமாலா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினம் [பாலசிங்கம்-கனடா], செல்வராஜா [இளைப்பாறிய ஆசிரியர்], காலஞ்சென்ற குமாரசாமி, செல்லத்துரை, இராசமணி, தவமணி [டென்மார்க்], புவனேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷாந்தி, மயூரி, தர்சிகா, நிருஷா, தாரணி, இலக்கியா, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று [03-08-92] திங்கட்கிழமை பிற்பகல் 1 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

66/1, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[22022]

தகவல்:
செ. ஸ்கந்தராஜா
(மகன்)
வேலணை

## இளையதம்பி இராசதுரை

[இளைப்பாறிய உதவி மதிப்பீட்டாளர் வருமான வரிக் கந்தோர், கொழும்பு]

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசதுரை 1-08-92 சனிக்கிழமை காலமானார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், செல்வி சாந்தி [முன்னாள் உதயன் ஊழியரும், தற்பொழுது கிறிஸ்ரோன் சிலோன் பிறைவேட் லிமிட், கொழும்பு], செல்வி கௌரி [போட் றேடேஸ் ரோன்ரன் அன் கம்பனி கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஞானகணேசன் [ஆயுள் வேத மருத்துவ உத்தியோகத்தர், ஏழாலை], திரு. ஞானசேகரம்பிள்ளை [இளைப்பாறிய மின் அத்தியட்சகர்], திரு. பாலகணேசன் [மலேரியா தடைப்பகுதி, யாழ்ப்பாணம்], திரு. ஆனந்தகணேசன் [ப. நோ. கூ. சங்கம் - தெல்லிப்பழை] ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற திரு. செல்லப்பா [இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்], காலஞ்சென்ற திருமதி து. இரத்தினம், திருமதி ச. இராசமணி [கனடா] ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.
[4932]

தகவல்:
மனைவி
கமலாதேவி

## சின்னத்துரை பூபாலசிங்கம்

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை பூபாலசிங்கம் [இளைப்பாறிய விற்பனை முகாமையாளர், — சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை] 01-08-1992ல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஜீவாவின் அன்புக் கணவரும், சுகந்தி, சுகிர்தா, சுரேஸ் [கனடா], சுதர்சன் [கொக்குவில் இந்துக் கல்லூரி], நிரோஜா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், தி. இராசேந்திரத்தின் [இராசேந்திரா ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்] அன்பு மாமனாரும், தி. தர்மகுலசிங்கம், த. பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவனேஸ்வரி, கமலேஸ்வரி, குணரத்தினம் [சித்திரா ரேடேஸ், கொழும்பு], மனோகரன் [கனடா], திருச்செல்வம் [ஆசிரியர் ஞானபண்டிதர் வித்தியாசாலை, கொக்குவில்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபிகன், நஜீவன், சஜீதன் ஆகியோரின் அன்புப் பேரனும், தி. சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும் ஆவார். மரணச் சடங்கு கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

''ஜீவவாசா''
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
தி. இராசேந்திரன்
(மருமகன்)
(22021)

## சுயவிருப்புடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுக்கு வந்து அகதிகளை இங்கு திரும்ப அனுப்பி வைத்தன. ஆனால் அகதிகள் பலவந்தத்தின் பேரில் அனுப்பப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இம்முறை சொந்த விருப்பத்தின் பேரில் இங்கு வர விரும்புபவர்களையே அனுப்புவதாக ஏற்பாடாகியுள்ளது. எனினும் அகதிகள் சொந்த விருப்பத்தில் தான் வருகிறார்களா? என்பதை எவ்வாறு உறுதிசெய்வது என்பதற்கான திட்டவட்டமான முறைகள் இன்னும் வகுக்கப்படவில்லை.

இந்திய அரசு தான் திருப்பி அனுப்பவிருக்கும் அகதிகளின் பட்டியலை அகதிகளுக்கான ஐ நா தூதரகத்திடம் ஒப்படைக்கும். அந்தப் பட்டியலில் இருந்து ஐ. நா. தூதரகம் எத்தனை பேர் திரும்பிப் போவதற்குச் சுயமாக விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டியது தான்!

இந்த லட்சணத்தில் இம்மாதத்தில் 10 ஆயிரம் அகதிகளை தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்புவதற்கு இந்தியா ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

வாரத்தில் 2 நாட்கள் ''இந்தியன் எயர் லைன்ஸ்'' விமானங்கள் மூலம் அகதிகள் இங்கு கூட்டி வரப்படுவர். ஒவ்வொரு நாளும் 4 தடவைகள் விமானங்கள் சேவையில் ஈடுபடும்.

அத்தோடு இம்மாதம் பத்தாம் திகதி கப்பல் மூலம் 5 ஆயிரம் அகதிகளைக்கூட்டி வர ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. [அ-10]

## நல்லூர்க்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆலயத்துக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு முன்பாக— பருத்தித்துறை வீதியில்— இம்முறை மூன்று தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உற்சவ காலத்தில் ஆலயப் பகுதியில் அமைதியைப் பேணுமாறும், ஆடம்பரங்களைத் தவிர்த்து தெய்வீக சிந்தனை ஊட்டத்தக்க வகையில் செயல்படுமாறு பக்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மாலையில் சுவாமி வெளி வீதி உலா வரும் போதும், அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றும்போதும் அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் பக்தர்கள் செயற்பட வேண்டும் என்றும்—

கூடுமானவரை பக்தர்கள் காலணிகளுடன் வருவதையும், அளவுக்கு அதிகமாக நகைகளை அணிவதையும் தவிர்க்க வேண்டும் என்றும்— கோரப்பட்டுள்ளது.

ஆலயத்திலும், சுற்றாடலிலும் கடமையாற்றும் தொண்டர்களுக்கு, பக்தர்களின் கௌரவமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### மாலை நிகழ்ச்சிகள்

ஆலயக் கிழக்கு வீதியில் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தல் சபையால் மாலை 6 மணி முதல் 8.30 மணி வரையும் இசை நிகழ்ச்சியும், கதாப் பிரசங்கமும் நடத்தப்படும்.

மேற்கு வீதியில் பிள்ளையார் கோவிலில் சைவ மகா சபை சார்பில் மாலை 5 30 மணி முதல் 6 30 மணி வரை கதாப்பிரசங்கமும் இடம் பெறும்.

''யாழோசை'' நிறுவனத்தின் சார்பில் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நல்லை ஆதீனத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

நல்லூர் ஆலய சுற்றாடல் பகுதிகளில் கடைகளும் விற்பனை நிலையங்களும் அமைக்கும் வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகின்றன.

(இ-3-8-15-30)

# பிரிட்டனின் லின் கிறிஸ்டி உலகின் அதிவேக ஓட்டவீரர்

பார்சிலோனா, ஆக: 3

உலகின் அதிவேக ஓட்டக்காரர் என்ற பெருமையைப் பிரிட்டிஷ் வீரர் லின்வுட் கிறிஸ்டி பெற்றார்.

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இவர் முதலாவதாக வந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். இத்தூரத்தை ஓடி முடிக்க அவர் எடுத்துக்கொண்ட நேரம் 9 96 வினாடிகளாகும். 10.02 வினாடிகளில் நமீபியா வீரர் பிராங்கி பிரெட்ரிக்கும், 10.04 வினாடிகளில் அமெரிக்க வீரர் டெனிஸ் மிச்சலும் இத்தூரத்தை ஓடி முடித்து முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றனர்.

1988 சோலில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கனடாவைச் சேர்ந்த பென் ஜோன்சன் முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றதும்— போதை மருந்து பாவித்தபின்னர் அவர் பந்தயத்தில் ஓடியது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரிடமிருந்து தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டதும் தெரிந்ததே,

பின்னர் அப் போட்டியில் இரண்டாவதாக வந்த அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் லூயிக்கு அத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இம்முறை பார்சிலோனா ஒலிம்பிக்ஸில் பங்குபற்றிய பென் ஜோன்சன் நூறு மீற்றர் அரையிறுதித் தேர்வில் ஐந்தாவதாக வந்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் தகுதியை இழந்தார்.

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் கனகரத்தினம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைத்திலிங்கம் கனகரத்தினம் [இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்] காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசிரோன்மணியின் அன்புக் கணவரும், சிறிதயானந்தன், விஜயானந்தன், ராஜானந்தன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அன்னலட்சுமி, அருணாசலம், சோமசுந்தரம் [முகாமையாளர், உதயன்], நடராசா [ஆனைக்கோட்டை] ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராசா [முன்னாள் பெற்றோலியம் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற கருணைராசா [பிரதம லிகிதர், பண்டாரவளை], காலஞ்சென்ற குலேந்திரராசா [தபால் அதிபர்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் உடுவில் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை (03-08-92) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்,

(22023)

தகவல்:
தியாகராசா
கொக்குவில்

## திரு. பேதுருப்பிள்ளை வெலிச்சோர்

மிருசுவிலைச் சேர்ந்த திரு. பேதுருப்பிள்ளை வெலிசசோர் [பொன்னுத்துரை] காலமாகிவிட்டார்.

இவர் மேரி மாகிறேட்டின் அன்புக் கணவரும், தவமணி [ஆசிரியை, யாழ்/போக்கட்டி றோ. க. வி.] காலம்சென்ற பீலிக்ஸ் போல், ஜெயராணி [ஆசிரியை, யாழ். போக்கட்டி அரசினர் வித்தியாலயம்], றீற்றா [ஜேர்மனி], றெஜின், சறோஸ், போகரஞ்சிதம் [அரசினர் வைத்தியசாலை, கொடிகாமம்], பற்றிமா, கின்சிலி [பிரான்ஸ்] காலம்சென்ற மேரிஸ்ரெலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறான்சிஸ், அலெக்சாண்டர், இம்மனுவேல், பீற்றர், இராசகாரியர், மகேந்திரம், மேரிபுஸ்பம், வசந்தராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் [3 - 8 - 92] பிற்பகல் 3 30 மணிக்கு மிருசுவில் சேமக்காலையில் நடைபெறும்.

16 பாற்றிமா அவெனியூ,
மிருசுவில்.
(22025)

தகவல் :
மேரி மாகிறெட்
(மனைவி)

## இராசையா நல்லம்மா

### [சரவணை மேற்கு]

சரவணை மேற்கைச் சேர்ந்த இராசையா நல்லம்மா அவர்கள் 1 - 8 - 92 அன்று காலமானார்.

இவர் பிரபல வர்த்தகர் அப்பாக்குட்டி இராசையாவின் அன்பு மனைவியும், சிந்துராசா [கொழும்பு வர்த்தகர்], விவேகானந்தன் [ஜேர்மனி], சிவானந்தன் [பிரான்ஸ்], காலஞ்சென்ற ரவீந்திரன் (செட்டிகுள வர்த்தகர்], ராமநாதன் [பாலன்] (செட்டிகுள வர்த்தகர்], திருமதி குலசிங்கம் ஜெயகௌரி, சுதானந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 2-8-92 அன்று [82 A] சீனியர் லேன் கலட்டி, யாழ்ப்பாணம். இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

82 (A), சீனியர் லேன்,
கலட்டி.

தகவல்:
ந. குலசிங்கம்.
(மருமகன்)
[இளைப்பாறிய அஞ்சல் அலுவலர்]
(22024)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-08 92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org